**செய்தி வெளியீடு எண்: 446** **நாள்: 13.09.2016**

<u>செய்தி வெளியீடு</u>

**தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் சாகுபடி செய்யப்பட்ட காய்கறிகள் கூட்டுறவு பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் சிறப்பு விற்பனை**

தமிழ்நாடு மற்றும் கர்நாடக மாநில எல்லைப் பகுதியில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக, கிருஷ்ணகிரி மாவட்ட ஓசூர் எல்லைப்பகுதியில் தமிழ்நாடு பதிவு எண்கள் கொண்ட காய்கறி வாகனங்கள் கர்நாடக மாநிலத்திற்குள் செல்ல முடியாத சூழ்நிலை உள்ளது. இந்த நிலை அரசின் கவனத்திற்கு வந்துள்ளதால், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள் தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட காய்கறி சாகுபடி செய்வோருக்கு எந்தவித சிரமமுமின்றி, காய்கறிகளை விற்பனை செய்திடவும், அதற்கு உரிய நியாயமான விலை, இந்த சூழ்நிலையிலும் கிடைப்பதற்கு ஏதுவாக இந்த வாகனங்களில் உள்ள காய்கறிகளை கூட்டுறவு அங்காடிகளின் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் விற்பனை செய்திட ஆணையிட்டுள்ளார்கள்.

இதன்படி, தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் சாகுபடி செய்யப்படும் காய்கறிகள், சென்னையிலுள்ள காமதேனு, சிந்தாமணி, காஞ்சிபுரம் மற்றும் வடசென்னை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலைகள், மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகிய நிறுவனங்கள் நடத்தும் 42 பண்ணைப்பசுமை நுகர்வோர் கடைகளிலும், மேலும் திருச்சி மாநகர் பகுதிகளில் உள்ள 8 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளிலும், மதுரை மாநகரில் உள்ள 4 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளிலும், கோயம்புத்துர் மாநகரில் உள்ள 10 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளிலும் ஆக மொத்தம் 64 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் விற்பனை செய்யப்படும். இதன்பொருட்டு இன்று (13.09.2016 ) 12 மெட்ரிக் டன் காய்கறிகள் கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டத்தில் விவசாயிகளிடமிருந்து கூட்டுறவுத்துறை மூலம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**